# Model Question Paper
# I Term Examination - 2021
# TAMIL - II PUC

Marks: 50 Time: 1Hr 50 min.

I. ஒரு வரி அளவில் விடை எழுதுக: 10X1=10

1. எண்ணத்திற்கு எட்டாதவர் யார்?
2. நால்வகை மதமும் உறவு கொண்டாடும் நாடு எது?
3. வஞ்சி மாநகரில் யாருக்கு கோயில் எழுப்பப்பட்டு இருந்தது?
4. குடும்பவிளக்கில் தாய் குழந்தையை எவ்வாறு குளிப்பாட்டினாள்?
5. வியாபாரிகள் தங்கள் தொழிலுக்குத் துணையாக யாரைச் சேர்த்துக் கொண்டனர்?
6. இந்தியாவில் தேசிய எழுச்சி எப்போது ஏற்பட்டது?
7. தந்தை பெரியார் எந்த ஆண்டு பிறந்தார்?
8. ஹிபியா பார்க்கில் மதியம் ஆபீஸ் இடைவேளையில் எவ்வளவு பேர் டிபன் சாப்பிடுவார்கள்?
9. சுயநலம் சிறுகதையில் வேலப்பன் கடை வீதிக்கு சென்று வாங்கி வருவன யாவை?
10. வெகுநாட்களாக வேலப்பனின் வேலையை கவனித்து வந்தது யார்?

II. இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை எழுதுக: 5X2=10

1. புலவர் குழந்தை அவர்கள் தமிழ்த்தாயின் அணிகலன்கள் என்று கூறும் நூல்கள் யாவை?
2. கண்ணகி சீற்றம் கொண்டு செய்த செயலை எழுதுக?
3. சீதை தீயில் புகுந்ததை கம்பர் எவ்வாறு வருணிக்கிறார்?
4. காதல் எதனால் பிறக்கிறது என்கிறார் கீட்ஸ்?
5. யோஷிகியின் நகைச்சுவையைப் பற்றி எழுதுக?

III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு இடம் சுட்டி பொருள் விளக்கம் எழுதுக: 3X2=6

1. “எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியும் எட்ட வில்லை”
2. ‘’குளத்து நீரில் குதிக்கும் கெண்டை மீன்’’
3. ‘’தண்ணீரில் பெயர் எழுதப்பட்ட ஒரு கவிஞன் இங்கே புதைக்கப்பட்டு இருக்கிறான்’’
4. ‘’ஐநூறுக்கும் மேற்பட்ட தென்னை மரங்களை வெட்டி அழித்து விட்டார்’’

5. ‘‘நீயும் ஜப்பான் காரியாகத்தான் இருக்கிறாய் என்று என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை’’
6. ‘‘அப்படியே ஆகட்டும் சாமி’’ என்று ஆமாம் போட்டு விட்டான்.’’

IV. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விரிவான விடை எழுதுக: 3X5=15

1. தமிழ் மொழியின் சிறப்புகளைப் புலவர் குழந்தை எவ்வாறு புகழ்கிறார்?
2. இராமன் சீதையைக் கடிந்துரைத்தவை யாவை?
3. இஸபெல்லா கனவு கண்ட பின் அவளது அன்றாடப் பழக்கங்கள் எவ்வாறு இருந்தன என்பதை எழுதுக:
4. அம்பேத்கர் கல்வி கற்ற விவரங்களை எழுதுக:
5. எந்தெந்த விஷயங்களை ஜானகிராமனிடம் பேசக்கூடாது என்று யோஷிகி ஹோட்டல் பணிப்பெண்ணிடம் கூறியிருந்தார்?
6. வேலப்பன் தன் வேலை நீக்கத்தை முதலாளி மாதவராயரிடம் புகார் செய்த பிறகு நிகழ்ந்தவற்றை எழுதுக:

V. கீழுள்ள கேள்விகளுக்கு சரியாக விடை எழுதுக

அ). பிரித்தெழுதுக: 1X2=2

1. அரனரி
2. அறக்கதிர்

ஆ). சேர்த்தெழுதுக: 1X2=2

1. சிந்தாத + மணி
2. பூ + பொழில்

இ). எதிர்ச்சொல் எழுதுக: 1X2=2

1. அழுது X
2. துன்பம் X

ஈ) வாக்கியத்தில் அமைத்து எழுதுக: 1X3=3

1. காவல் தெய்வம்
2. இளந்தென்றல்
3. மனிதப் பருவங்கள்